ந.க.எண்: 30173/2020/சஉதி.1

மாவட்ட ஆட்சியரகம்,
(சத்துணவுத் திட்டப்பிரிவு),
மதுரை
நாள்: .09.2020

# பத்திரிக்கை செய்தி

மதுரை மாவட்டத்தில் உள்ள பள்ளி சத்துணவு மையங்களில் காலியாக உள்ள 358 அமைப்பாளர்கள், 71 சமையலர்கள் மற்றும் 559 சமையல் உதவியாளர்கள் காலிப்பணியிடங்களை, நேரடி நியமனம் மூலம் பூர்த்தி செய்திட, **05.10.2020 மாலை 5.45 மணி வரை விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன.**

05.10.2020 அன்று மாலை 5.45 மணிக்கு மேல் காலதாமதமாகவோ / தபால் மூலமோ / நேரிலோ பெறப்படும் விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது. பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்கள் தொடர்புடைய ஊராட்சி ஒன்றியங்கள், மதுரை மாநகராட்சி மற்றும் திருமங்கலம் நகராட்சி அலுவலகத்தில் மட்டுமே கொடுத்து ஒப்புதல் ரசீது பெற்றுகொள்ளுமாறு தெரிவிக்கப்படுகிறது.

அரசாணைகளின்படி, சிறுபான்மையினர் பள்ளிகள் தவிர்த்து, ஏனைய பள்ளிகளில் உள்ள அமைப்பாளர், சமையலர் மற்றும் சமையல் உதவியாளர் காலிப்பணியிடங்கள் இனசுழற்சி அடிப்படையில் நிரப்பப்படும். மேற்காணும் காலிப்பணியிட விவரங்கள் மற்றும் இனசுழற்சி விவரங்கள் ஊராட்சி ஒன்றிய, மாநகராட்சி மற்றும் திருமங்கலம் நகராட்சி அலுவலகங்களின் விளம்பர பலகையில் ஒட்டப்பட்டிருக்கும்.

**விண்ணப்படிவ நகல்கள் முற்றிலும் இலவசமாக, தொடர்புடைய ஊராட்சி ஒன்றியம், மதுரை மாநகராட்சி மற்றும் திருமங்கலம் நகராட்சி அலுவலகங்களில் மட்டுமே பெற்றுக்கொள்ளலாம். மேலும்,மதுரை மாவட்ட இணையதள முகவரியான www.madurai.nic.in-ல் பதிவிறக்கம் செய்து விண்ணப்பிக்கலாம்.**

**இந்நேரடி நியமன நடவடிக்கைகள் அனைத்தும் மாவட்ட நிர்வாகத்தின் இறுதி முடிவுக்கு உட்பட்டவையாகும்.**

**விண்ணப்ப படிவத்துடன் இணைக்கப்பட வேண்டிய சான்றுகள்:**

1. **கல்வித்தகுதி சான்று / பள்ளி மாற்றுச் சான்று மற்றும் மதிப்பெண் சான்றிதழ் - நகல்.**
2. **இருப்பிடச்சான்று ஆதாரம். (குடும்ப அட்டை நகல் / ஆதார் கார்டு / வங்கிக் கணக்கு புத்தக நகல் / வாக்காளர் அடையாள அட்டை நகல் - இணைக்க வேண்டும்.**
3. **சாதிச் சான்றிதழ் நகல்.**
4. **விதவை மற்றும் கணவரால் கைவிடப்பட்டவர்களாக இருப்பின் உரிய அலுவலரிடமிருந்து பெறப்பட்ட சான்றிதழ் நகல்.**
5. **வருமானச்சான்று**
6. **மாற்றுத்திறனாளியாக இருப்பின் அதற்கான சான்று.**

**ஊதியம்:**

**அமைப்பாளர்:**

7வது ஊதியக்குழுவின்படி அரசாணை (நிலை) எண்:303 நிதி (சம்பளக்குழு) துறை நாள்:11.10.2017-ன்படி சிறப்பு கால முறை ஊதியத்தில் (Level-1) குறைந்தபட்சம் ரூ.7700, அதிகபட்சம் ரூ.24,200/- என்ற ஊதிய விகிதத்தில் ஊதியம் வழங்கப்படும்.

**சமையலர்**

7வது ஊதியக்குழுவின்படி அரசாணை (நிலை) எண்:303 நிதி (சம்பளக்குழு) துறை நாள்:11.10.2017-ன்படி சிறப்பு கால முறை ஊதியத்தில் (Level-1) குறைந்தபட்சம் ரூ.4100, அதிகபட்சம் ரூ.12,500/- என்ற ஊதிய விகிதத்தில் ஊதியம் வழங்கப்படும்.

**சமையல் உதவியாளர்:**

7வது ஊதியக்குழுவின்படி அரசாணை (நிலை) எண்:303 நிதி (சம்பளக்குழு) துறை நாள்:11.10.2017-ன்படி சிறப்பு கால முறை ஊதியத்தில் (Level-1) குறைந்தபட்சம் ரூ.3000, அதிகபட்சம் ரூ.9000/- என்ற ஊதிய விகிதத்தில் ஊதியம் வழங்கப்படும்.

- அனைத்து பணியிடங்களும் பெண்களுக்கு மட்டுமே ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.
- இனச்சுழற்சி முறையின் அடிப்படையில் மட்டுமே விண்ணப்பங்கள் பரிசீலனை செய்யப்படும்.
- நியமன பணியிடத்திற்கும் விண்ணப்பதாரர் குடியிருப்பிற்கும் இடையே உள்ள தூரம் 3 கி.மீ. சுற்றளவு இருக்க வேண்டும்.
- வயது வரம்பு 01.09.2020 அன்றைய தேதியில் குறிப்பிட்டுள்ள வயதினை பூர்த்தி செய்திருக்க வேண்டும்.

**தகுதிகள்: அமைப்பாளர்**

| இனம் | வயது | கல்வித் தகுதி |
|---|---|---|
| அமைப்பாளர் பொதுப்பிரிவினர் மற்றும் தாழ்த்தப்பட்டோர் | 01.09.2020 அன்று 21 வயது பூர்த்தியடைந்தும் 40 வயதிற்கு மிகாதவராகவும் இருக்க வேண்டும். | 10ம் வகுப்பு தேர்ச்சி பெற்றிருக்க வேண்டும் |
| பழங்குடியினர் | 01.09.2020 அன்று 18 வயது பூர்த்தியடைந்தும் 40 வயதிற்கு மிகாதவராகவும் இருக்க வேண்டும். | 8வது தேர்ச்சி / தோல்வி பெற்றிருக்க வேண்டும். |
| விதவை மற்றும் கணவனால் கைவிடப்பட்டவர் | 01.09.2020 அன்று 20 வயது பூர்த்தியடைந்தும் 40 வயதுக்கு மிகாதவராகம் இருக்க வேண்டும். | பொது / தா.வ. (S.C) வகுப்பினர் 10-ம் வகுப்பு தேர்ச்சி பெற்றிருக்க வேண்டும்<br>பழங்குடியினர்<br>8வது தேர்ச்சி / தோல்வி பெற்றிருக்க வேண்டும். |

**தகுதிகள்: சமையலர்**

| | | | |
|---|---|---|---|
| 1. | பொதுப்பிரிவினர் மற்றும் தாழ்த்தப்பட்டோர் | 01.09.2020 அன்று 21 வயது பூர்த்தியடைந்தும் 40 வயதிற்கு மிகாதவராகவும் இருக்க வேண்டும். | 8-ம் வகுப்பு தேர்ச்சி அல்லது தேர்ச்சி பெறாதவர் |
| 2. | பழங்குடியினர் | 01.09.2020 அன்று 18 வயது பூர்த்தியடைந்தும் 40 வயதிற்கு மிகாதவராகவும் இருக்க வேண்டும். | எழுதப்படிக்கத் தெரிந்திருக்க வேண்டும். |
| 3. | விதவை மற்றும் கணவனால் கைவிடப்பட்டவர் | 01.09.2020 அன்று 20 வயது பூர்த்தியடைந்தும் 40 வயதுக்கு மிகாதவராகம் இருக்க வேண்டும். | பொது / தா.வ. (S.C) வகுப்பினர் 8-ம் வகுப்பு தேர்ச்சி அல்லது தேர்ச்சி பெறாதவர்.<br>பழங்குடியினர்<br>எழுதப்படிக்கத் தெரிந்திருக்க வேண்டும். |

**தகுதிகள்: சமையல் உதவியாளர்**

| | | | |
|---|---|---|---|
| 1. | பொதுப்பிரிவினர் மற்றும் தாழ்த்தப்பட்டோர் | 01.09.2020 அன்று 21 வயது பூர்த்தியடைந்தும் 40 வயதிற்கு மிகாதவராகவும் இருக்க வேண்டும். | 5-ம் வகுப்பு தேர்ச்சி அல்லது தேர்ச்சி பெறாதவர் |
| 2. | பழங்குடியினர் | 01.09.2020 அன்று 18 வயது பூர்த்தியடைந்தும் 40 வயதிற்கு மிகாதவராகவும் இருக்க வேண்டும். | எழுதப்படிக்கத் தெரிந்திருக்க வேண்டும். |
| 3. | விதவை மற்றும் கணவனால் கைவிடப்பட்டவர் | 01.09.2020 அன்று 20 வயது பூர்த்தியடைந்தும் 40 வயதுக்கு மிகாதவராகம் இருக்க வேண்டும். | பொது / தா.வ. (S.C) வகுப்பினர் 5-ம் வகுப்பு தேர்ச்சி அல்லது தேர்ச்சி பெறாதவர்.<br>பழங்குடியினர்<br>எழுதப்படிக்கத் தெரிந்திருக்க வேண்டும். |

**மாவட்ட ஆட்சித்தலைவர்**
**மதுரை மாவட்டம்.**

## Vacancy Details

| S. No. | Name of the Block / Corporation | Organiser | Cook | Cook Assistant |
|---|---|---|---|---|
| 1 | Madurai East | 43 | 12 | 63 |
| 2 | Madurai West | 41 | 18 | 52 |
| 3 | Thiruparankundram | 67 | 11 | 82 |
| 4 | Melur | 28 | 3 | 46 |
| 5 | Kottampatti | 23 | 1 | 39 |
| 6 | Alanganallur | 30 | 1 | 35 |
| 7 | Vadipatti | 25 | 6 | 30 |
| 8 | Chellampatti | 8 | 1 | 35 |
| 9 | Usilampatti | 15 | 6 | 29 |
| 10 | Sedapatti | 14 | 4 | 36 |
| 11 | Thirumangalam | 16 | 2 | 44 |
| 12 | T.Kallupatti | 8 | 0 | 18 |
| 13 | Kallikudi | 18 | 1 | 23 |
| 14 | Madurai corporation | 21 | 5 | 27 |
| 15 | Thirumangalam Muni | 1 | 0 | 0 |
| | **TOTAL** | **358** | **71** | **559** |

**மாவட்ட ஆட்சித்தலைவர்**
**மதுரை மாவட்டம்.**